பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 05 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜெனிவாவில் நடைபெறும் உலக சுகாதார கூட்டமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா ஸ்விட்சர்லாந்து சென்றுள்ளார்.

2. விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை களைவதற்கு நீர் பாதுகாப்பு முக்கிய தீர்வாக அமையும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. பயிர் சாகுபடி மற்றும் அறுவடையில் புதிய தொழில்நுட்பங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

4. கேரள மாநில முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியின் திரு. வி.டி. சதீஷன் இன்று பதவியேற்கிறார்.

5. தென்மேற்குப் பருவமழை அடுத்த சில தினங்களில் படிப்படியாக அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, ஜெனிவாவில் நடைபெறும் உலக சுகாதார கூட்டமைப்பின் மாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உலக சுகாதார நடைமுறைகளை மறுசீரமைப்பது அனைவரின் கூட்டுப் பொறுப்பு என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த மாநாடு நடைபெற உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆறு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் **165** நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை களைவதற்கு நீர் பாதுகாப்பு முக்கிய தீர்வாக அமையும் என்று மத்திய சாளை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், நீர் பாதுகாப்புத் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு மக்களின் பங்கேற்பு அவசியம் என்று கூறினார்.

கிராமப்புறங்கள் மற்றும் விவசாயிகளின் மேம்பாட்டிற்கு, கிராமபி பஞ்சாயத்து முதல் சட்டப்பேரவை உறுப்பினர்கள் வரை அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை அவர் வலிறுத்தினார்.

வரும் ஆண்டுகளில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக இருக்கும் என்றும், நீடித்த வளர்ச்சிக்கு, சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய நீண்டகாலத் திட்டங்களை செயல்படுத்த வேண்டியது அவசியம் என்று திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

பயிர் சாகுபடி மற்றும் அறுவடையில் புதிய தொழில்நுட்பங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் குண்டூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

நவீன மற்றும் நீடித்த வேளாண் நடைமுறைகளின் முன்மாதிரி மாவட்டமாக குண்டூர் மாவட்டம் உருவெடுக்கும் என்று அவர் கூறினார்.

கிராமப்புறங்களில் பயிர் சாகுபடி மற்றும் முறையான வேளாண் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு மண்டலத்திலும் குறைந்தது ஒரு விதை கிராமத்தை உருவாக்கி, அதுகுறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண் நடைமுறை சார்ந்த தகவல்கள் சென்றடையும் வகையில், செயல்திறன்மிக்க தகவல்தொடர்பு அமைப்பை வலுப்படுத்த வேண்டியன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் பிரத்யேக யூ-டியூப் சேனல் தொடங்கப்பட வேண்டும் என்றும் திரு பெம்மசானி சந்திரசேகர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கேரள மாநில முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியின் திரு. வி.டி. சதீஷன் இன்று பதவியேற்கிறார்.

திருவனத்தபுரத்தில் நடைபெறும் பதவியேற்பு விழாவில், அம்மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவருக்கு

பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைக்கிறார்.

அவருடன் காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 20 பேர் அமைச்சர்களாக பதவியேற்கின்றனர்.

இந்த விழாவில், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மற்றும் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்.

12 ஆயிரம் பேர் கலந்துகொள்ளும் வகையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, அம்மாநில முதலமைச்சராக பதவியேற்கவுள்ள திரு வி.டி. சதீஷன், நேற்று மாலை ஆளுநரை சந்தித்து அமைச்சர்கள் பட்டியலை வழங்கினார்.

<<<<>>>>

எரிபொருள் நுகர்வைக் குறைக்கும் வகையில் போக்குவரத்துப் பயன்பாட்டை முறைப்படுத்துவது உட்பட பல்வேறு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு தில்லி காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தில்லி காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச அளவில் நிலவும் சூழல் மற்றும் பிரதமர்

திரு. நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனப் பயன்பாட்டை குறைத்து எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து அலுவலகங்களும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதன் மூலம் மத்திய அரசு மேற்கொண்டு வரும் முன்முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

2026-ம் ஆண்டிற்கான பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இம்மாதம் 25-ம் தேதி வழங்குகிறார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில், இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்ம விபூஷண் விருது 5 பேருக்கும், பத்ம பூஷன் விருது 13 பேருக்கும், பத்ம ஸ்ரீ விருது 113 பேருக்கும் என மொத்தம் 131 பேருக்கு இந்த விருதுக்குத் தேர்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதில் 19 பெண்களும், மறைவிற்குப் பிந்தைய விருதாக 16 தனிநபர்களும் அடங்கும்.

நாட்டின் உயரிய விருதான பத்ம விருதுக்குத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் குறித்த அறிவிப்பு ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று வெளியிடப்படும்.

கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவியியல் மற்றும் பொறியியல், பொது நலன், வர்த்தகம் மற்றும் தொழில்துறை போன்ற துறைகளில் சிறப்பாக சேவையாற்றியவர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

<<<<>>>>

வளர்ச்ஜியடைந்த மேற்குவங்கம் என்ற தொலைநோக்குப் பார்வையுடன், சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு அம்மாநில அரசு உயர் முன்னுரிமை அளிக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமது மேற்குவங்கப் பயணத்தின் போது, டீஸ்டா நதியின் அழகையும், அங்குள்ள இயற்கை காட்சிகளையும் கண்டு ரசித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து ஈரான் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்கா அறிவித்துள்ள ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை நிராகரிப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் யுரேனியம் கையிருப்பு, பொருளாதார தடைக்கு எதிரான நிவாரணம் மற்றும் தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட அம்சங்களை ஈரான் வலியுறுத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

காங்கோ மற்றும் உகாண்டா நாடுகளில் எபோலா வைரஸ் தொற்று காரணமாக 80க்கும் அதிகமானோர் உயரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, பொது சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

அந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளில் வைரஸ் பரவுவதைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே ஐ.நா. சுகாதார முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆய்வகங்களில் நடத்தப்பட்ட பரிசோதனையில் 246 பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்மேற்குப் பருவமழை அடுத்த சில நாட்களில் படிப்படியாக அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல், அந்தமான் கடற்பகுதிகளில், அடுத்த இரண்டு, மூன்று நாட்களில், இதற்கான சாதகமான சூழல் நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், கர்நாடகா, சட்டிஸ்கர், மேற்கு வங்கம், ஜார்கண்ட்,ஒடிசா, ஆந்திர பிரதேசம் உள்ளிட மாநிலங்களில் ஒருசிலப் பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபார், கேரளம், மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் ஒரு சிலப் பகுதிகளில், அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது

இதனிடையே, மேற்கு உத்தரப்பிரதேசத்தில் இன்று கடும் வெப்பம் நிலவும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹரியானா, சண்டிகர், மத்திய பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், தெலங்கானா மற்றும் விதர்பா ஆகிய பகுதிகளில், அடுத்த மூன்று நாட்களுக்கு இதே போன்ற சூழல் நிலவக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

வடமேற்கு இந்தியாவில் அடுத்த நான்கு நாட்களுக்கு, அதிகபட்ச வெப்பநிலை மூன்று முதல் ஐந்து டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கிடையேயான ஆட்டம் டிராவில் முடிந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

காசி அணி - தில்லி அணிகளுக்கிடையேயான மற்றொரு ஆட்டம் கோல் எதுவுமின்றி டிராவில் முடிந்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில், கேரளம் அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.

எர்ணாகுளத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 23 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

தரம்சாலாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்தது.

223 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பஞ்சாப் அணி 8 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்தது.

மற்றொரு போட்டியில், தில்லி அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 193 ரன் எடுத்தது.

194 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தில்லி அணி

19 புள்ளி 2 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 197 ரன் எடுத்தது.

இன்று நடைபெறும் போட்டியில், சென்னை அணி - ஐதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>